# Purananuru – புறநானூறு

## நூற்குறிப்பு

| | |
|---|---|
| புறநானூறு | புறம் + நான்கு + நூறு |
| ஆசிரியர் எண்ணிக்கை | 158 |
| பாடல் எண்ணிக்கை | 400 |
| எல்லை | 4-40 |
| பொருள் | புறம் |
| தொகுத்தவர் | தெரியவில்லை |
| தொகுப்பித்தவர் | தெரியவில்லை |
| கடவுள் வாழ்த்து பாடியவர் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| தெய்வம் | சிவன் |

- புறம் என்பது மறம் செய்தலும், அறம் செய்தலும் ஆகும்
- இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களாலும், மன்னர்களாலும் பாடப்பெற்றவை.
- புறநானூற்றுப் பாடல்கள் மூலம் பண்டைய தமிழக மன்னர்களின் "அறஉணர்வு, வீரம், கொடை, ஆட்சிச்சிறப்பு, கல்விப்பெருமை" முதலியவற்றையும் புலவர்களின் பெருமிதம் , மக்களுடைய நாகரிகம், பண்பாடு முதலியவற்றையும் அறியலாம்.
- வேறுபெயர்கள் – புறம், புறம்பாட்டு, புறம்பு, தமிழ் கருவூலம்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## மேற்கோள்கள்

- வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய்கூறுவல்

| |
|---|
| தென்கடல் வளாகம் பொதுமை இன்றி<br>வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்<br>நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்<br>கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,<br>உண்பது நாழி, உடுப்பது இரண்டே<br>பிறவும் இல்லாம் ஓரொக்குமே,<br>செல்வத்துப் பயனே ஈதல்<br>துய்ப்பேம் எனினே தப்புந பலவே<br>– மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் |
| நாடா கொன்றோ, காடா கொன்றோ,<br>அவலா கொன்றோ; மிசையா கொன்றோ,<br>எவ்வழி நல்லவர் ஆடவர்,<br>அவ்வழி நல்லை; வாழிய நிலனே!<br>– ஔவையார் |
| பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய<br>சாலார் சாலார் ஆகுபவே<br>– கண்ணகனார் |
| கொடை மடம் படுத லல்லது<br>படைமடம் படான்பிறர் படைமயக் குறினே<br>– பரணர் |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| |
|---|
| கணிச்சிக் கூர்மபடைக் கடுந்திறலொருவன்<br><br>பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ<br><br>– நரிவெரூ உத்தலையார் |
| நளியிரு முந்நீர் நாவாய் ஒட்டி<br>வளிதொழில் ஆண்ட உரவோன்மருக!<br>களி இயல் யானைக் கரிகால் வளவ! …<br><br>– வெண்ணிற் குயத்தியார்<br><br>என்ற பாடல் வரிகள் மூலம் முன்னோர் கப்பற்பயணம் செய்தமையை அறியலாம் |
| செல்வத்துப் பயனே ஈதல்<br>துய்ப்பேம் எனினே தப்புந பலவே<br><br>(புறம் 189; 7-8)<br><br>செல்வத்தைத் தனியே அனுபவித்தல் இழத்தலுக்குச் சமம் |

## பிறசெய்திகள்

- ஜி போப் புறநானூற்றின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி.யு. .பெயர்த்துள்ளார்
- தமிழரின் உயரிய வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்குவது இந்நூல்
- புறநானூற்றின்கண் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன) .12 திணைகளில் உழிஞ்சை திணை தவிர(



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in